தங்களை ஒத்த வயதுஉடைய மொழி கற்றுக்கொள்பவர்களைப் போல தங்கள் நிலையும் உயர்ந்துள்ளதைப் பகிரச் சொல்ல வேண்டும்.

புதிய வகை மொழி கற்றலில் இருக்கும் கற்றல் கற்பித்தலின் சிறப்புகள் மற்றும் இடர்ப்பாடுகளை அவர்கள் உரையாடல்கள்வழித் தெரிந்து கொண்டு மேலும் அதனைச் செம்மைப்படுத்தும் செயல்பாடுகளை உருவாக்க வேண்டும்.

### முடிவுரை

கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல் சூழலை உளவியல் மனத்திட்பச் சூழலால் கடக்கச்செய்து மொழி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். புதிய கற்றல் வழிமுறைகளின் வாயிலாக மொழித்திறனை மேம்படுத்திச் செம்மொழி இலக்கியப் பண்பாட்டுத் தளத்திற்குத் தகுதியுள்ளவர்களாகக் கிராமப்புற மாணவர்களைத் தயார் செய்வதே இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

### துணைநின்றவை


- களஆய்வின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட செய்திகள் - ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
- இராஜேந்திரன் என்.எஸ் (2006), "தமிழ் கற்றல் கற்பித்தலில் சவால்களும், பரிந்துரைகளும்", ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - மாநாட்டு ஆய்வடங்கல்.
- மன்னர்மன்னன் ம., (2011) "உயர்கல்விக் கூடங்களில் தமிழ் : மெய்ம்மையும் சவால்களும்" மலேசியப் பன்மொழிச் சூழலில் தமிழ், மலாய் பல்கலைக்கழக வெளியீடு.
- Clawson G.S. James And Haskins E.Mark, (2016), Teaching Management, Cambridge Universiy Press, New Delhi.


******************

# இலக்கியம் கற்றலும் கற்பித்தலும் - பன்னோக்குப் பார்வை
## Teaching and Learning Literature - Multifaceted view

பத்மா ஸ்ரீதர் | Padma Sridhar

முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை, இந்தியா.
apadmasrini@gmail.com, https://orcid.org/0000-0002-8308-4806

### ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் பொதுவாக சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டே படைக்கப்படுகின்றன. படைப்பாளர்கள் தாம் வாழும் காலத்திய மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு, சமூகப் பிரச்சினைகள் இவற்றைக் கருத்தில் கொண்டே இலக்கியங்களைப் படைத்து வந்துள்ளனர். அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் போன்றவை உலகம் முழுவதிலும் பரவி வாழும் மக்களின் நம்பிக்கைகள் சார்ந்தும் அவர்களின் வாழுமிடத்திற்குத் தகுந்த ஒழுக்கத்தைச் சார்ந்துமே அவ்வப் பகுதிகளில் வாழும் படைப்பாளர்களால்

படைக்கப்பட்டு வந்துள்ளன. தற்கால நவீன உலகில் அத்தகு இலக்கியங்களை வாசிப்பதற்கு நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட பொதுவான கண்ணோட்டம் தேவையான ஒன்றாக உள்ளது. எனவே அவ்விலக்கியங்களைப் பிறதுறைகளான அறிவியல், உளவியல், வரலாறு, பொருளாதாரம், சமூகவியல் நோக்கில் மாணவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுக்கும்போது அவர்களிடையே கற்கும் ஆர்வம் அதிகரிக்கின்றது. இலக்கியத்தைக் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் இத்தகு பன்னோக்குப் பார்வை அவசியம்; இது தனிமனித நம்பிக்கை கடந்து மாணவர்களை ஆய்வு நோக்கில் அவ்விலக்கியத்தை அணுகச் செய்கிறது என்பதில் ஐயமில்லை. சமய இலக்கியங்கள் எப்பொழுதும் இறைவனை அடையும் பக்திநெறியையே போதிக்கும் என்ற பொதுவான கருத்து நிலவுவதால் அவ்விலக்கியங்களில் உள்ள பிற நல்ல கருத்துக்கள் பெரும்பாலும் அறிந்து கொள்ளப்படாமலேயே உள்ளன. பக்தி இலக்கியத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரும், கற்றுக்கொள்ளும் மாணவரும் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு அந்த இலக்கியத்தை எப்படி அணுக வேண்டும் என்பதைப் பற்றியே இக்கட்டுரை விரிவாக ஆராய உள்ளது.

## Abstract

Literature when written reflects the present, taking into account the customs, culture and social issues of the people of the time in which they live. Literators have written moral literatures, religious literatures, community-based folk literatures, etc., which have been written in different parts of the world, depending on the beliefs and morals of the place of residence. In today's modern world reading such literature requires a general outlook beyond one's personal beliefs. Thereby, when students are taught to read literature in a different perspective, like focusing on other fields such as science, psychology, history, economics and sociology, the interest in learning increases. Such a multifaceted view is essential for learning and teaching literature as it transcends individual beliefs and enables students to approach in that manner for research purposes. This paper explores in detail ways in which a teacher who teaches religious literature and the student who learns it can approach that literature beyond their personal beliefs giving fresh perspective to religion which doesn't only cater to worship and devotion.

**திறவுச்சொற்கள் (Keywords)**: இலக்கியம், அறிவியல், நம்பிக்கை, படைப்பாளன், Religion, Literature, Science, belief

## முன்னுரை

பக்தி இலக்கியங்களைக் கற்பவரும் கற்பிப்பவரும் சுய நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு அவ்விலக்கியங்களை வாசித்தல் என்பது அவசியமான ஒன்று. அப்படி வாசிக்கும்பொழுதுதான் அப்படைப்பில் காட்டப்பட்டுள்ள பல நல்ல கருத்துக்கள் தெளிவாக விளங்கும். தாம் வாழும் சூழலுக்குத் தேவையான குறிப்பிட்ட இலக்கிய வகையைப் படைக்கும் எந்த ஒரு படைப்பாளனும் தம் படைப்பில் சமகால மக்களின் எண்ண ஓட்டங்களையும், வாழ்வியல் நெறிகளையும், நம்பிக்கைகளையும், சுற்றிலும் தாம் கண்டு மகிழும் இயற்கையையும் நடுவுநிலைமையோடு தம் இலக்கியத்தில் படைத்திருப்பான். அவற்றைக் கண்டறியும் நோக்கில் பிறதுறைகளின் கண்கொண்டு பக்தி இலக்கியத்தை எப்படிக் கற்கவும்/கற்பிக்கவும் வேண்டும் எனக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். இருபெரும் சமயங்களான சைவ, வைணவப் பக்தி இலக்கியங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## சூழலியல் நோக்கு

இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைக் காட்டுவது சூழலியல். புலவர்கள் தம் இலக்கியப் படைப்பில் காட்டும் இயற்கைக் காட்சிகள் பல நேரங்களில் வளமான அக்கால உலகை நம் மனக்கண்முன் கொண்டு வந்து மகிழ்விக்கும். பக்தி இலக்கிய இயற்கை வருணனைகளும் அவ்வகையில் நம் மனக்கண்முன் காட்சிகளை விரியச் செய்து மனத்திற்கு இன்பத்தை அளிக்க வல்லன.

**"வந்து உதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்**
**அந்தி விளக்கும் அணிவிளக்காம்....(நா.தி.பி. 2297).**

எனத் தம் மூன்றாம் திருவந்தாதியில் பேயாழ்வார் திருவல்லிக்கேணியின் மாலைநேர மாசுகளற்ற அக்காலக் கடற்கரைக் காட்சியை வருணிக்கின்றார். அங்குள்ள வெண் அலைகள் கரையில் கொண்டு சேர்க்கும் முத்தும் பவளமும் அந்திப்பொழுதில் ஒளிவிளக்காக அவருக்குத் தோன்றுகின்றன.

**"மருளைச் சுரும்பு பாடியளக்கா வரையார் திருக்கையாற்**
**றாளத்தோடு பவளமீனுஞ் சண்பை நகராரே" (தேவாரம்-68)**

என்னும் சம்பந்தரின் தேவாரப்பாடலில் கடற்கரையை ஒட்டியுள்ள சண்பை நகரில் வண்டுகள் மருள் என்கின்ற பண்ணைப் பாட அகமகிழ்ந்து தம் அலையெனும் கரத்தால் கடலானது முத்துக்களையும் பவளங்களையும் பரிசாக வாரி அளித்த காட்சி காட்டப்படுகிறது.

காவிரி ஆறு மலையிலிருந்து சந்தனம் மற்றும் அகில் கட்டைகளையும், பொன்னையும், இரத்தினங்களையும் திரட்டிக் கொணர்ந்து தள்ளி வயல்களில் பாய்ந்த காட்சியைத் திருமங்கையாழ்வார்

**"மலைதிகழ் சந்து, அகில், கனகம், மணியும் கொண்டு**
**வந்துஉந்தி, வயல்கள்தொறும் மடைகள் பாய....(நா.தி.பி 1620)**

எனக் காண்பிக்கின்றார். திருவண்ணாமலைப் பதிகத்தில் உயர்ந்தோங்கி நிற்கும் காட்டு மரங்களில் தாவிக் குதித்து ஆண் குரங்கு ஒன்று மாங்கனியைப் பறிக்க மரக் கிளையை இழுத்து விடுகிறது. கனி அதன் கையில் கிட்டிவிட்டாலும் இழுத்துவிடப்பட்ட வேகத்தில் மரக்கிளை மலை உச்சியைத் தாக்கி அசைக்கின்றது. அதனால் மலையைச் சுற்றிக் கொண்டிருந்த சூல் கொண்ட மேகம் ஓரிடத்தில் மழையைப் பொழிவிக்க அங்கு அலைந்து கொண்டிருந்த காட்டுப் பெண்மான்கள் மழைத்துளிக்கு அஞ்சி மலைச் சோலைகளில் அங்குமிங்கும் ஓட ஆரம்பிக்கின்றன. இந்தக் காட்சியை

**"தேமாங்கனி கடுவன் கொள விடுகொம்பொடு தீண்டித்**
**தூமழை துறுகல் மிகை சிறுநுண்துளி சிதற**
**ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்." (தேவி, 2021:பக் 211).**

எனத் திரைப்படக் காட்சி போன்று நம் மனக் கண்முன் விரிக்கின்றது திருவண்ணாமலைப் பதிகப் பாடல். நாலாயிர திவ்வியப் பிரபந்தம் காட்டும் ஒரு காட்சியில் உயரமாக வளர்ந்திருக்கின்ற அசோக மரத்தினுடைய சிவந்த மலர்களைக் கண்ட வண்டுகள் நெருப்பு

என்று அஞ்சி ஒதுங்கித் திரிகின்றன. ஒருவாறு மயக்கம் நீங்கி அவை மலர்கள்தாம் எனத் தெளிவுற்று அமரும்போது அருகிலிருக்கும் மாமரக் குயில்கள் அதை உணராது நெருப்பில் வண்டுகள் விழுந்துவிட்டன என எண்ணிப் பயந்து கூவுகின்றனவாம். இந்தக் காட்சியை

**"ஓங்கு பிண்டியின் செம்மலர் ஏறி வண்டு உமிழ்தர, மா ஏறித்**
**தீம் குயில் மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை...." (நா.தி.பி. 1376)**

எனப் பாசுரமாக வடிக்கிறார் திருமங்கையாழ்வார்.

### தத்துவ நோக்கு

எல்லாவற்றையும் கடந்து அதேசமயத்தில் எல்லாவற்றுள்ளும் உறைபவனையே சமய இலக்கியங்கள் கடவுளாகக் காட்டுகின்றன. இதனையே

**"அந்தமில்லானுக் ககலிடந்தான் இல்லை**
**அந்தமில்லானை அளப்பவர்தாமில்லை**
**அந்தமில்லானுக்கு அடுத்தசொல் தான் இல்லை**
**அந்தமில்லானை அறிந்து கொள்பத்தே"** (பக்திக் காலம் 5.4.1.1.1, Krishnamurti.C.R)

என ஓரிடத்தில் நிலையில்லா அளவிடற்கரிய பெயரற்ற அந்த இறையெனும் உணர்வை அனுபவித்தலால் அன்றி உணர முடியாது என்கிறார் திருமூலர்.

இருத்தலியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்ந்ததுபோல் இறைவன் உண்டென்று நம்புபவர்களுக்கு எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் அவன் இருப்பான்; இல்லையென எண்ணுபவர்களுக்கு அவன் எங்கும் இல்லையாகவே தோன்றுவான் என்பதை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்

**உளன் எனில் உளன் அவன், உருவம் இவ் உருவுகள்**
**உளன் அலன் எனில் அவன், அருவம் இவ் அருவுகள்**
**உளன் என இலன் என இவை குணம் உடைமையில்**
**உளன் இரு தகைமையொடு, ஒழிவு இலன் பரந்தே** (நா.தி.பி. 2683)

என நம்மாழ்வாரும், திருமந்திரத்தில்

**உள்ளத்தும் உள்ளன் புறத்து உள்ளன் என்பவர்க்கு**
**உள்ளத்தும் உள்ளன், புறத்து உள்ளன் எம்இறை**
**உள்ளத்தும் இல்லை புறத்துஇல்லை என்பவர்க்கு**
**உள்ளத்துஇல்லை, புறத்துஇல்லை தானே.** (திருமந்திரம் 1532)

எனத் திருமூலரும் காட்டுகின்றனர். அதே நேரத்தில் நம் உள்ளத்துள் உள்ளதே இறையென்பதைக் காட்ட சமய இலக்கியங்கள் பலவும் முயன்றுள்ளன. இதனையே சிவவாக்கியர் தம் பாடலில்

**காணவேண்டு மென்றுநீர் கடல்மலைகளேறுவீர்**
**ஆணவம தல்லவோ அறிவில்லாத மாந்தரே**
**வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே தரிப்பிரேற்**

**றாணுவாக நின்றசீவன் றான்சிவ மதாகுமே.** (சிவவா.476)

என இறைவனை வெளியில் தேடுபவர்களுக்கு ஆணவமே மிஞ்சும் என்கிறார்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் "மாணிக்குறள் உருஆய மாயனைத் தன் மனத்துள்ளே பேணிக் கொணர்ந்து புகுத வைத்துக்கொண்டதாகப் பாடுகிறார் ஆழ்வார்.

**வாழ்வியல் உண்மைகள்**

எவ்வளவு துன்பம் நம்மை வந்து வருத்தினாலும் பிறரிடம் செலுத்தும் அன்பில் குறைவுபடாது வாழ்தலின் அவசியத்தை

**"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப் பொன்போல்**
**கனலில் பொரிய வார்ப்பினும் அன்போடு**
**உருகி அகம்குழை வார்க்கன்றி'.....** (பக்திக் காலம் 5.4.1, Krishnamurti.C.R)

மற்றவர்களால் மெய்ப்பொருள் காணுதல் இயலாது என்கிறார் திருமூலர்.

சொற்களால் வடிக்க முடியா மகிழ்ச்சியான நிலையை மனதிற்குத் தரும் இன்ப உணர்வே இறை என்பதை

**"முகத்திற்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்**
**அகத்திற்கண் கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய**
**சுகத்தைச் சொல் எனல் சொல்லுமாறு எங்கனே".** (பக்திக்காலம் 5.4.1.1.5, Krishnamurti.C.R)

எனக் கேட்கின்றார் திருமூலர். அந்த இறை நடுநிலைப் பண்பைக் கொண்டது என்பதைக் காட்ட திருவருட்பாவில்

**"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே**
**காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே**
**வல்லார்க்கும மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே**
**மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே**
**நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே**
**நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே**
**எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே".**

எனப் பாடுகிறார் வள்ளலார்.

**அறிவியல் நோக்கு**

பிறதுறை அறிவுகொண்டு இலக்கியத்தை ஆராய முற்படும்போது அறிவியல் நோக்கு தோற்றம் பெறுகிறது. இந்நோக்கின் மூலம் இலக்கியத்தில் காணப்படும் அறிவியல் சார்ந்த உண்மைகளை வெளிக்கொணர முடியும். உதாரணமாக திருப்பாவையிலிருந்து ஒரு காட்சி.

பாவை நோன்பிற்காகச் சிறுமிகளனைவரும் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் உறக்கத்திலிருந்து எழாத ஒருத்தியை எழுப்பும் நிலையில் விரைவாக எழுந்துவா எனக் கூறும் தோழிகளிடம் பொழுது விடிந்து விட்டதா என்ன? என்று உறங்கிக் கொண்டிருப்பவள் கேட்க, அவளுக்கு மறுமொழி கூறுவது போல்

"**வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று**
**புள்ளும் சிலம்பின காண்...."** (திருப்பாவை 13)

என விடியலை அறிவுறுத்தும் விதமாக மற்ற சிறுமிகள் பதிலிறுப்பதாகப் பாசுரத்தை அமைத்துள்ளார் ஆண்டாள் நாச்சியார். இப்பாசுரத்தில் வானியல் நிகழ்வுகள் காட்டப்பட்டுள்ளன. அத்துறை சார்ந்த வல்லுநர்களின் துணையோடு இக்கருத்தை மேலும் ஆராய இயலும்.

**"இரும்பு அனன்று உண்ட நீர்போல்**
**எம் பெருமானுக்கு என்தன்**
**அரும் பெறல் அன்பு புக்கிட்டு**
**அடிமை பூண்டு உய்ந்து போனேன்**". (வசந்தாள்.த, பகுதி 5.4)

எனப் பாடுகிறார் திருமங்கையாழ்வார். இவ்வடிகளில் ஆன்மாவும் பரமான்மாவும் கூடிய நிலையைக் காட்ட காய்ச்சிய இரும்பின் மீது பட்ட நீரை உவமையாக்குகிறார். நீர் ஆவியாகி கண்ணுக்குத் தெரியாது மறையும் அறிவியல் உண்மை இங்குக் காட்டப்படுகிறது. நம் உடலானது ஐம்பூதங்களால் ஆனது என்பது அறிவியலாளர்களின் கருத்து. இதனையே திருமூலர்

"**பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்**
**ஏதம் படஞ்செய்து........"** (பார்வதிதேவி, 2019)

எனத் தம் திருமந்திரத்தில் காட்டுகிறார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார்

**"மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமா காசமுமாம்**
**புண்ணா ராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்...**

எனக் காட்டுகிறார். தொல்காப்பியர் மரபியலில் உலகிலுள்ள உயிர்களை எல்லாம் அவற்றிற்குரிய அறிவின் அடிப்படையில் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவுயிர் வரை பகுத்துக் காட்டுகிறார். திருவாசகத்தில் இதற்கு ஒருபடி மேலே போய்

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்** (சிவபுராணம்-1)

என எல்லாவித பிறப்பும் தாம் பிறந்து வருந்தியதாகக் காட்டும் மாணிக்கவாசகர் தம் மெய்யறிவால் உணர்ந்துகொள்ள நினைப்பவருக்கு அவ்விறை ஓர் நுண் உணர்வு மட்டுமே என்பதை, "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே" என்றும் "தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய் என்றும் காட்டுகிறார்.

திருமூலரின் திருமந்திரத்தில்

**அணுவில் அணுவினை ஆதிப் பிரானை**
**அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு**
**அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு**
**அணுவில் அணுவை அணுகலும் ஆமே** (திருமந்திரம், 2008)

என்ற பாடல் "அணுவின் அடிப்படைத் துகள்களையே கட்டமைக்கும் பரமாணு என்ற ஹிக்ஸ்போசோன் (Higgs Boson) என்ற கடவுள் துகள் குறித்த சோதனையை நினைவுபடுத்துகின்றது. (விநாயகலிங்கம், 2016).

**உளவியல் நோக்கு**

பக்தி இலக்கியங்கள் அதிக பற்றுவைக்கும் ஒருவரின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை நமக்குக் காட்டுகின்றன. மிக அதிகமாக ஒருபொருளின் மீது பற்று வைக்கும் ஒருவர் காணும் அனைத்தையும் அப்பொருளாகவே காண்பார். இந்நிலையையே தொல்காப்பியம் "நோக்குவ எல்லாம் அவையே போறல்" எனக் காட்டுகிறது. திருமூலர் தம் திருமந்திரத்தில் அன்பு செலுத்துதலையே சிவம் என்கின்றார்.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்"** (பாடல்.270)

அவருடைய கண்களுக்கு அன்பும் தாம் வணங்கும் இறையாகவே தோன்றுகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாருக்குத் தாம் கொண்ட அளவுகடந்த பற்றின் காரணமாக உண்ணுகின்ற சோறும், பருகுகின்ற நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாமுமே கண்ணனென்னும் இறையாகவே தோற்றமளிக்கிறது.

**"உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்**
**கண்ணன்"** (நா.தி.பி. 3293).

இதுதான் நம் வாழ்க்கைப் பாதை என வகுத்துக்கொண்டு அதில் முறையோடு தொய்வில்லாது பயணம் செய்தால் வெற்றி நிச்சயம். எனினும் அந்த வெற்றியை முறைப்படி உண்மையோடு அணுகவேண்டும். பாதை பிறழ்ந்து குறுக்கு வழியில் முன்னேற முயன்றால் நெருஞ்சிமுள் கால்களைக் கீறிக் கிழித்து முன்னேற முடியாமல் செய்துவிடும். எனவே முறையான வாழ்க்கைப் பாதையைக் கடந்து சென்று வெற்றி பெறுவதே நம் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதைத் திருமூலர்

**நெறியைப் படைத்தான்; நெருஞ்சில் படைத்தான்!**
**நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்!**
**நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு**
**நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே!** (திருமந்திரம், 1617)

எனக் காட்டுகிறார்.

**பண்பாடும் பழக்கவழக்கங்களும்**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் பாடல்களில் வரலாற்றுக் கருத்துக்களையும், இசை பற்றிய கருத்துக்களையும் எடுத்துக் காட்டியுள்ளனர். "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்த நாதமுனிகள் இசைப்பா என மூன்று தொகுதியாகவும், இயற்பா என ஒரே தொகுதியாகவும் வகைப்படுத்தித் தொகுத்துள்ளார்." (கமலக் கண்ணன்.இரா. வ தொகுதி-1, ப-84, ).

"இந்தளத்திலிருந்து தொடங்கி வியாழக் குறிஞ்சி வரை 29 பண்களில் பாடல்கள் திவ்வியப் பிரபந்தத்தில் அமைந்துள்ளன. தேவாரத்தில் 23 பண்கள் உள்ளன". (கமலக்கண்ணன்.இரா. வ, தொகுதி-1, ப-89).

அக்கால மக்களின் உணவு, உடை, குழந்தை வளர்ப்பு, திருமணம் முதலான பழக்கவழக்கங்களை அறிந்துகொள்ளவும் பக்தி இலக்கியங்கள் துணை நிற்கின்றன. இறந்தவர்களின் குற்றங்களைக் கூறாது அவர்களின் குணங்களைக் கூறிப் பாடிப் பாடி அழும் முறை

> **"கூடிக் கூடி உற்றார்கள் இருந்து குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து**
> **பாடிப் பாடி ஓர் பாடையில் இட்டு"** (நாலாயிர தி.பி. 378)

எனப் பெரியாழ்வார் திருமொழியில் காட்டப்பட்டுள்ளது.

'பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கிய வகையின் தோற்றத்திற்குப் பெரியாழ்வார் பாடிய பெரியாழ்வார் திருமொழி முன்னோடியாக விளங்குகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்க்கையின் நிகழ்வுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் பக்தி இலக்கியங்கள் நமக்கு விளக்குகின்றன.

**முடிவுரை**

- பக்தி இலக்கியங்கள் இயற்கையை இரசிக்கக் கற்றுக் கொடுத்துள்ளன.
- படைக்கப்பட்ட காலத்திய வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகின்றன.
- சுய நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட நோக்கில் வாசிக்கும்போது கடவுட்கோட்பாட்டைப் பற்றிய நடுநிலைமைத் தன்மையைப் புலப்படுத்துகின்றன.
- அறிவியல் நோக்கில் அணுகும்போது இறையருள் பெற்று இறைநிலைக்கு உயர்ந்தவர்கள் தாம் பக்தி இலக்கியத்தைப் படைத்தார்கள் என்னும் எண்ணக் கருத்தை மாற்றி படைப்பாளிகளின் சமகால அறிவியல் அறிவை உணர்த்துகின்றன.
- மனித வாழ்வு நன்முறையில் அமையத் தேவையான வழிமுறைகளை உளவியல் நோக்கில் அவை உணர்த்துகின்றன.
- பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று நோக்கில் ஆய்வு மேற்கொள்ள விரும்புவோருக்குத் தேவையான தகவல்களைப் பக்தி இலக்கியங்கள் தருகின்றன.
- எனவே, மண்ணில் நல்லவண்ணம் வாழ, பக்தி இலக்கியத்தைப் பன்முக நோக்கில் நாம் கற்கவும் கற்பிக்கவும் வேண்டும் என்பதே இந்த ஆய்வின் முடிவாக முன்வைக்கப்படுகிறது.

## துணைநின்றவை


- கமலக்கண்ணன், இரா. வ (2019), நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தொகுதி1,2,3,4 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- தேவி. இரா, (2021) "தேவாரத்தில் ஐம்பெரும் பூதத்து இயற்கை", ஐம்பெரும் பூதத்து இயற்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு (ISBN 978-93-80426-04-4), பக். 208-215
- "தமிழ் இலக்கியம் தொன்றுதொட்டு இன்று வரை', பகுதி 5, .பக்திக்காலம், Krishnamurti.C.R. Dr.") தமிழ்நேஷன் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- https://tamilnation.org/literature/krishnamurti/05bakthi.htm
- பண்டைய தமிழ்ப் பாடல்களில் விஞ்ஞானம், பகுதி 3 of 6, கந்தையா தில்லை விநாயகலிங்கம், (2016, Dec 10) தீபம் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- http://www.ttamil.com/2016/12/03-of-06.html
- பஞ்சபூதத்தில் அடக்கிய இந்த பிரபஞ்சமும் நம் சாஸ்திர வழிமுறைகளும், பகுதி-2, பார்வதி தேவி, (2019, ஜூன் 4), தினமணி கட்டுரையிலிருந்து பெறப்பட்டது.
- https://www.dinamani.com/religion/religion-news
- திருமூலர், திருமந்திரம், தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூல்
- http://www.tamilvu.org/ta/library-l4100-html-l41A0res-136137
- பன்னிரு திருமுறை பாட்டும் பொருளும் மின்னூல், தேவாரம் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- http://www.thevaaram.org/thirumurai_1/songview.php?thiru=1&Song_idField=1001&padhi=001
- வசந்தாள். த, திருமங்கையாழ்வார் தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூல், பகுதி 5.4.
- http://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2022-html-p202254-28726


******************

# இணையவழிக் கல்விச் செயல்பாட்டில் மொழியாசிரியர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளும் அவற்றுக்கான தீர்வுகளும் Solutions for Problems Faced by the Language Teachers in Online Education


### முனைவர் மு.புஷ்ப ரெஜினா | Dr.M.Pushpa Regina

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, (தன்னாட்சி), திருச்சி-17. (Assistant Professor, Department of Tamil, Bishop Heber College, Trichy-17)
pushpargn@gmail.com - 6383662806.



## ஆய்வுச்சுருக்கம்

ஆதிமனிதன் தொடங்கி இன்று வரை கற்றல், கற்பித்தல் செயல்பாடு மனித வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளமையைக் காண முடிகிறது. அவ்வாறு கற்கும் மனிதன் தன் வாழ்வில் தான் கற்றவற்றைச் செயல்படுத்திப் பார்க்கும்போதே அவன் நாகரிகம் பெற்றவனாகிறான். குறிப்பாக நெருப்பு, போர்க்கருவிகள், உழவுத்தொழில் போன்றவை மனிதன் கற்றறிந்தவை என்பதைக் காட்டிலும் பட்டறிவின் வெளிப்பாடே எனலாம்.

**"கோடல் மரபே கூறுங் காலைப்**